
செய்தி

சிங்கப்பூர்

# நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவுக்கு 8 புதிய பாடத்திட்டங்கள்

வாசிப்புநேரம் - 1 நிமிடம்

வெளியீடு : 14 Mar 2026 09:00PM




படம்: Envato Elements

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் செயற்கை நுண்ணறிவை மையமாகக் கொண்டிருக்கும் 8 புதிய பாடத்திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. அனைத்துத் துறைகளிலும் செயற்கை நுண்ணறிவுத் திறன்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. அதைக் கையாளும் வகையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்களுக்கான கற்றல் தினத்தில் பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பாடத்திட்டம் ஒவ்வொன்றும் 3 முதல் 6 மாதங்கள் வரை இடம்பெறக்கூடியது. செயற்கை நுண்ணறிவைக் கட்டமைப்பது, வாடிக்கையாளர்களின் அனுபவத்தைச் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி இன்னும் சுமுகமாக்குவது உள்ளிட்டவற்றைப் பாடத்திட்டங்களின்வழி கற்றுக்கொள்ளலாம். பிரதமர் அலுவலக மூத்த துணையமைச்சர் டெஸ்மண்ட் டான் (Desmond Tan) நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். செயற்கை நுண்ணறிவு தொடர்ந்து உருமாறும். வேலைகள் மாறிக்கொண்டே இருக்கும். ஊழியர்கள் கற்றுவைத்திருக்கும் திறன்கள் ஒருகாலத்தில் தேவையற்றவையாக மாறக்கூடும் என்றார் திரு டான். அவற்றைச் சமாளிக்க ஊழியர்கள் புதிதாகக் கற்றுக்கொள்வதில் ஆர்வத்துடன் இருக்கவேண்டும் என்றார் அவர். புத்தாக்கத் திறன், தொடர்புத் திறன், சிந்தனைத் திறன் உள்ளிட்டவற்றை வளர்த்துக்கொள்வதில் மக்கள் கவனம் செலுத்தவேண்டும் என்றார் திரு டான்.

*ஆதாரம் : Mediacorp Seithi*

https://seithi.mediacorp.sg/singapore/eight-new-ai-lesson-plans-ntu-847881